Daily Thanthi

Dated: 29-06-2024

### விக்கிரவாண்டி இடைத்தேர்தலையொட்டி சோதனை

# டாக்டர் காரில் ரூ.1 கோடி பறிமுதல்

## பறக்கும்படையினர் அதிரடி

விழுப்புரம், ஜூன்.29-
விக்கிரவாண்டி இடைத்தேர்தலையொட்டி நடந்த வாகன சோதனையின்போது, டாக்டர் காரில் இருந்த ரூ.1 கோடியை பறக்கும்படையினர் பறிமுதல் செய்தனர்.

**பறக்கும் படையினர் சோதனை**

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (ஜூலை) 10-ந்தேதி நடைபெற உள்ளது. தேர்தலின்போது அரசியல் கட்சியினர், வாக்காளர்களுக்கு பணமோ அல்லது பரிசு பொருட்களையோ கொடுத்து வாக்குகளை பெற முயற்சிப்பதை தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படையின் விழுப்புரம் மாவட்டம் முழுவதும் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் நேற்று மாலை விழுப்புரம் மாவட்ட எல்லையான மழவந்தாங்கல் சோதனைச்சாவடியில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

**காரில் ரூ.1 கோடி**

அப்போது திருவண்ணாமலை மார்க்கத்தில் இருந்து வந்த ஒரு காரை சோதனை செய்தபோது, அதில் 2 சூட்கேஸ்களில் 500 ரூபாய் நோட்டுகள், கட்டுக்கட்டுகளாக இருந்தன. இதைப்பார்த்து



டாக்டரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட ரூ.1 கோடியை படத்தில் காணலாம்.

அதிர்ச்சியடைந்த அதிகாரிகள், உடனே காரில் வந்தவரிடம் விசாரணை நடத்தினர்.

விசாரணையில் அவர், ஈரோட்டை சேர்ந்த மதனகோபால் (வயது 48) என்பதும், தற்போது சென்னையில் தங்கியிருந்து ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் டாக்டராக பணியாற்றி வருவதும் தெரிய வந்தது.

**பூர்வீக சொத்து விற்ற பணம்**

மேலும் அவரிடம், இந்த பணம் எப்படி கிடைத்தது? எங்கிருந்து கொண்டு வருகிறீர்கள் என அதிகாரிகள் விசாரணை நடத்தினர். அதற்கு அவர் கூறுகையில், எங்களுக்கு பூர்வீக சொத்து திருச்சியில் உள்ளது. அதனை விற்றதன் மூலம் என்னுடைய பங்காக ரூ.1 கோடி கிடைத்தது. அதனை பெற்றுக்கொண்டு நண்பருடன் சென்னைக்கு காரில் திரும்பிக்கொண்டிருந்தேன். பூர்வீக சொத்து விற்பனை செய்ததற்கான ஆவணங்களும், பணம் பெற்றதற்கான ஆவணங்களும் என்னிடம் இருக்கின்றன என்றார்.

**கருவூலத்தில் ஒப்படைப்பு**

இருப்பினும் தேர்தல் சமயத்தில் அதிக தொகையை கொண்டு சென்றதால் இது பற்றி பறக்கும் படை அதிகாரிகள், விக்கிரவாண்டி தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகருக்கு தகவல் தெரிவித்தனர். அவர், வருமானவரித்துறைக்கு தகவல் தெரிவித்து பணத்தை கருவூலத்தில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

flying squad team seized 1 crore from a doctor in Vikravandi assembly constituency.

Daily Thanthi

Dated: 29.06.2024

விக்கிரவாண்டி இடைத்தேர்தல்:

## வேட்புமனு நிராகரித்ததை எதிர்த்த வழக்கு முடித்து வைப்பு

### ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, ஜூன்.29-

விக்கிரவாண்டி எம்.எல்.ஏ. புகழேந்தி மரணமடைந்ததை அடுத்து, அந்த தொகுதிக்கு வருகிற ஜூலை 10-ந்தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இதற்காக வேட்பு மனு தாக்கல் கடந்த 14-ந்தேதி முதல் 21-ந்தேதி வரை நடந்தது.

இந்த தொகுதியில் போட்டியிட தேசிய மக்கள் சக்தி கட்சி சார்பில் சிவகங்கையைச்சேர்ந்த ராஜமாணிக்கம் என்பவர் வேட்புமனு தாக்கல் செய்தார். இந்த வேட்மனு நிராகரிக்கப்பட்டதால், அவர் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு பொறுப்பு தலைமை நீதிபதி ஆர்.மகாதேவன், நீதிபதி முகமது சபீக் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, "வேட்புமனுவுடன் தாக்கல் செய்த பிரமாண மனுக்களில் குறைபாடுகள் இருந்ததால் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. இந்த தகவல் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. எனவே, இந்த விவகாரம் தொடர்பாக தேர்தல் வழக்குத்தான் தாக்கல் செய்ய முடியும்" என்று தேர்தல் ஆணையம் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், மனுவை முடித்து வைத்து உத்தரவிட்டனர்.

High court dismissal the case against rejection nomination for Vikravandi by-election the E.C explained that the nomination was rejected due to defects in the affidavits filed with the nomination & the information was communicated to the petitioner So the Judges accepted this and ordered to close the petition.

Daily Thanthi

Dated: 29.06.2024

# கொடி அணிவகுப்பு



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (ஜூலை) 10–ந்தேதி நடக்கிறது. இந்த தேர்தலில் வாக்காளர்கள் எந்தவித அச்சமும் இன்றி சுதந்திரமாக வாக்குச்சாவடிகளுக்கு சென்று ஜனநாயக கடமையாற்றலாம் என்பதை உணர்த்தும் வகையில் மத்திய பாதுகாப்பு படையினர் நேற்று கல்பட்டு கிராமத்தில் கொடி அணிவகுப்பு நடத்தியதை படத்தில் காணலாம்.

Paramilitary force conduct flag parade for free fair poll at vikravandi assembly constituency.